# Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
In the Court of Judicial Magistrate No.I Cuddalore.

| | | |
|---|---|---|
| Case Number | : | CC.No. 1117/2025 |
| Police station | : | Pew-Panruti |
| Deposition of witness for Prosecution | : | LW 2 / PW1 |
| Name | : | விஷ்ணுராஜா தலைமை காவலர் |
| Father Name/Husband Name | : | |
| Village | : | |
| Cuddalore | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873, விதிமுறைகளின் படி 04.06.2026 நாளாகிய இன்று SELVI.R.SRINITHI BA. LL.B(HONS) LL.M நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, கடலூர் அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

( எதிரி ஆஜர். ).

**முதல் விசாரணை:**

நான் தற்போது கடலூர் புது நகர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணி புரிந்து வருகிறேன். கடந்த 12.01.2025 காலை 11.00 மணியளவில் நான் பண்ருட்டி மது விலக்கு அமலாக்கப்பிரிவில் நான் தலைமை காவலராக பணி புரிந்தபோது என்னுடன் உதவி ஆய்வாளர் திரு.கிருஷ்ணமூர்த்தி மற்றும் தலைமை காவலர் திரு. ரவிக்குமார் என்பவரும் பண்ருட்டி மது விலக்கு அமல் பிரிவின் சரகத்திற்குட்பட்ட மேல்பட்டாம்பாக்கம் பேருந்து நிறுத்தம் அருகே மது விலக்கு சம்பந்தமாக ரோந்து பணியில் ஈடுபட்டுக்கொண்டு இருந்தபோது ஆஜர் எதிரி மணிகண்டன், என்பவர் மேல்பட்டாம்பாக்கம் பேருந்து நிறுத்தம் அருகில் கையில் ஒரு பாலிதின் பையுடன் நடந்து வந்துகொண்டு இருந்தார். அவர் எங்களை

கண்டதும் ஓட முயற்சி செய்தார். அப்போது பார்ட்டி சகிதம் வளைத்து பிடித்து அவரை விசாரித்து அவரை சோதனை செய்தபோது அவர் வைத்திருந்த பையில் 500 ML அளவு கொண்ட Jeffries பிராந்தி 2 எண்ணிக்கையும், 375ML அளவு கொண்ட Chris Vodka Orange 2 எண்ணிக்கையும், 500 ML அளவு கொண்ட Neon Vodka 1 எண்ணிக்கையும். 500 ML அளவு கொண்ட Biscuite பிராந்தி 1 எண்ணிக்கையும் மற்றும் 375 ML அளவு கொண்ட Courrier நொப்போலியன் பிராந்தி 2 எண்ணிக்கையும் வைத்திருந்தார். மேற்சொன்ன புதுவை மாநில பாட்டில்களை வைத்திருக்க அவரிடம் எந்தவித உரிமமோ, அனுமதியோ அவரிடம் இல்லை. அதனால் அவரிடம் காரணம் கூறி எதிரியை காலை 11.10 மணியளவில் நீதிமன்ற கட்டளைகளை கடைபிடித்து கைது செய்தோம். அவரின் உறவினர்களிடம் தகவல் கூறினோம். அந்த இடத்தில் அந்நிய சாட்சிகள் யாரும் சாட்சியம் அளிக்க முன்வராததால் என்னுடன் பணியில் இருந்த தலைமை காவலர் திரு. ரவிக்குமார் மற்றும் எனது முன்னிலையில் எதிரி வைத்திருந்த மது பாட்டில்களை கைப்பற்றி காலை 11.30 மணியளவில் கைப்பற்றுதல் மகசர் தயார் செய்தும், அதில் நானும் தலைமை காவலர் திரு.ரவிக்குமார் என்பவரும் கையெழுத்து இட்டோம். தற்போது என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். **மேற்படி கையொப்பத்துடன் கூடிய கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பிறகு எதிரி மற்றும் வழக்கு சொத்து சகிதம் 12.30 மணிக்கு காவல் நிலையம் வந்து காவல் நிலைய குற்ற எண். 12/2025 சட்டப் பிரிவு 4(1)(C), 4(1)(a) TNP Amendment Act ன் வழக்கு பதிவு செய்ய உதவி ஆய்வாளருக்கு உதவியாக இருந்தோம். உதவி ஆய்வாளர் என்னையும் விசாரணை செய்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.</u>

எதிரியை கைது செய்ததாக சொல்லப்படும் இடத்திற்கு அருகே மேல்பட்டாம்பாக்கம் சோதனை சாவடி உள்ளது என்றால் சரிதான். மேற்படி சோதனை சாவடியில் 24 மணி நேரமும் காவலர்கள் இருப்பார்கள் என்றால் சரிதான். பாண்டிச்சேரியில் இருந்து தமிழ் நாட்டிற்குள் வரவேண்டும் என்றால் மேல்பட்டாம்பாக்கம் சோதனை சாவடியில் இருக்கும் காவலர்கள் வரும் நபர்களை சோதனை செய்து தான் அனுப்புவார்கள் என்றால் சரிதான். எதிரியை கைது செய்யததாக சொல்லப்படும் இடத்திற்கு அருகில் நிறைய கடைகள் மற்றும் வீடுகள் உள்ளது என்றால் சரிதான். உதவி ஆய்வாளர் அங்குள்ளவர்களை விசாரித்து இந்த வழக்கில் சாட்சிகளாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். எதிரியிடம் இருந்து கைப்பற்றப்பட்டதா சொல்லப்படும் பொருட்களை புகைப்படம் எடுத்தார்களா என்றால் இல்லை. எதிரி எந்த குற்ற செயலிலும் ஈடுபடவில்லை என்றாலும் காவல் நிலைய புள்ளி விபர கணக்கிற்காக என்னுடைய உயர் அதிகாரி தயாரித்து வைத்திருந்த வழக்கிற்கு அனுசரணையாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. எதிரியை சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் கைது செய்யவில்லை என்றால் சரியல்ல.